REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 7௳ திங்கள் (18—2—57) ★ ★ வெளியூர்: மாசி 8௳ செவ்வாய் (19—2—57) [இதழ் 216

இதுவும் செய்வார்கள்! இன்னமும் செய்வார்கள்!

புதுடில்லி, பிப். 17—

குழந்தைகளுக்கான இலக்கியங்களை இந்தி மொழியில் தயாரிக்க டில்லி சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களாம்!

ஆங்கில மொழியில் உள்ள பல புத்தகங்களை, இந்தி மொழியில் மொழி பெயர்க்கத் திட்டமிட்டிருக்கிறதாம் டில்லி!

தனிப்பட்ட புத்தக வெளியீட்டாரிடமே இந்த வேலை ஒப்புவிக்கப்படுமாம்!

'காங்கிரஸ் ஆட்சியின் தேர்தல் ஸ்டண்ட்'

உலகின் குறுக்கிலும் நெடுகிலும் திராவிட நாடு முழக்கம் எதிரொலிக்கப்போகிறது

தென் சென்னை பாராளுமன்றத் தொகுதிக்குப் போட்டியிடும் தோழர் பி. பாலசுப்பிரமணியம் முழக்கம்

சென்னை, பிப். 18—

"அண்மையில் நடைபெற இருக்கிற பொதுத் தேர்தல், திட்டவட்டமான, தெளிவான ஒரு பிரச்சினையை—திராவிட நாட்டுப் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. உங்களுடைய நல்லாதரவுடன் நான் இந்தத்தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்திற்குச் சென்றால், நிச்சயமாக அங்கு திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை எழுப்புவேன். உடனடியாகத் திராவிட நாடு பிரிக்கப்படுமோ இல்லையோ அது பற்றிக் கவலையில்லை; ஆனால், அந்தப் பிரிவினை முழக்கம், உலகம் முழுமையிலும் கேட்கத்தான் போகிறது. உலகத்தின் கண்களிலும் காதுகளிலும் நமது இயக்கமும் அதன் கோரிக்கைகளும், காணப்படவும் கேட்கப்படவும் இருப்பது நிச்சயத்திலும் நிச்சயம். உலகின் குறுக்கிலும் நெடுக்கிலுமாக, திராவிட நாடு முழக்கம் முழங்கத்தான் போகிறது."

—இவ்வாறு, தென்சென்னை பாராளுமன்றத் தொகுதியில் தி. மு. கழகத்தின் சார்பில் போட்டியிடும் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், நேற்று மாலை சென்னையில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் நாட்டுப் பிரிவினை முழக்கத்தை முழங்கினார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"பொது மக்களாகிய நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள். என்னை ஒரு தனி மனிதனாக நினைக்கவேண்டாம். ஆனால் உங்கள் மத்தியில் உலவும் ஒரு சாதாரண—எளிய திராவிட இனச் சகோதரன் என்ற முறையில் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் நீங்கள் எனக்காகப் போடுகின்ற ஒவ்வொரு ஓட்டும் காங்கிரஸ் ஆதிபத்தியத்திற்கு வைக்கின்ற வேட்டாகும்; உங்கள் வாக்கு ஒவ்வொன்றும், வட நாட்டுச் சுரண்டலுக்கு வைக்கும் வெடியாகும்; அவைகள், வட நாட்டிற்கு நாம அடிமைகள், கூலிகள் என்ற நிலையை மாற்றி நாம் நமக்காக வாழும் ஒரு தன்னிலை அடைவதற்காகத் தரப்படும் வாக்கு என்பதைப் பொதுமக்களாகிய நீங்கள் உணரவேண்டும்.

"இந்தத் தேர்தலில், சென்ற தடவைபோல் எனது மதிப்பிற்குரிய பொது மக்கள் தவறான பாதையில் செல்லமாட்டார்கள் என நிச்சயமாக நான் நம்புகிறேன். இம்முறை காங்கிரசை ஒரேயடியாக முறியடிக்கநீங்கள் அனைவரும் ஒன்றுபட்டாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரசைவிடக் கண்ணியமும் ஜனநாயகத் தன்மையும் கொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைப் பொதுமக்கள் காங்கிரசாருக்கு உணர்த்த வேண்டும்.

"இந்த நேரத்தில் தி மு கழகத் தவருக்குத் தொல்லை தர வேண்டுமென்பதற்காக எத்தனையோ கொடுமைகளைக் காங்கிரசார் செய்து வருகிறார்கள். இதற்காக நமது தோழர்கள் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால், கழகத்திற்குச் செய்கின்ற கொடுமைகள் என நினைத்து அவர்கள் செய்கின்ற ஒவ்வொன்றும்,தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளும் கொடுமையே தவிர வேறல்ல. எனவே, அவர்களுடைய துஷ்பிரசாரங்களைப் பொதுமக்கள் காதில் போட்டுக்கொள்ளப் போவதில்லை என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மக்கள் படை வரிசையே பலமான ஆதரவாகும்

"நாம் திராவிட நாடு கேட்பது போலத்தான் ஜின்னாவும் பாகிஸ்தான் கேட்டார். அவர் இரயில் வண்டிகளைக் கவிழ்ப்பது, கட்டிடங்களைத் தீயிட்டுக் கொளுத்துவது போன்ற பயங்கரச் செயல்களால் பாகிஸ்தானைப் பெறவில்லை. ஆனால் முஸ்லீம் இன மக்களின் ஒருமித்த ஆதரவைப் பக்கபலமாகக்கொண்டு பாகிஸ்தானைப் பெற்றார். அதுபோல வேதான் திராவிட முன்னேற்றக் கழகமும், தனக்குப் பின்னால் நிற்கிற மக்களின் படைவரிசையை பலமான ஆதரவாகக் கொண்டு திராவிட நாடு கோரிக்கையை எழுப்பி நிற்கிறது. எனவே, அண்ணா அவர்களின் தலைமையில் நிற்கிற நாம், உலகின் மற்ற நாடுகளெல்லாம் விடுதலை பெறுவதற்கு எடுத்துக்கொண்ட காலத்தைவிட மிகக் குறைந்த காலத்திலேயே திராவிட நாட்டை அடையப்போகிறோம் என்று உறுதி கூறுகிறேன்."

இவ்வாறு, குறிப்பிட்ட தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், தம்மை எதிர்த்து நிற்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் கடந்தகால அரசியல் பித்தலாட்டங்களை எடுத்துக் கூறி, இதுவரை வாயை மூடிக் கொண்டிருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், தானும் ஒரு தமிழன்தான், எனவே தமிழ் மக்கள் தனக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுத் திரியும் அற்பத்தனத்தைச் சுட்டிக் காட்டியும் இதுபோன்ற சந்தர்ப்பவாதிகளுக்கு மக்கள் இந்தத் தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் இறுதியில் 'திராவிட நாடு வாழ்க—தி. மு கழகம் வாழ்க—காங்கிரசின் பாசிச வெறி ஒழிக' என்று முழக்கமிட்டார். (ந. நி.)

சர்க்கார் தரும் உறுதிமொழிகள் குறித்து ஊழியர் கருத்து

'இடைக்கால நிவாரணம் உடனடியாகத் தரவேண்டும்'

'இன்றேல் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவோம்'

போர்க்கோலம் பூண்டுள்ள சென்னை என். ஜி. ஓ.-க்கள் கண்டிப்பு

சென்னை, பிப். 17—

சென்னை சர்க்கார் ஊழியர்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர்!

வரும் பிப்ரவரி 25-ந் தேதிக்குள் சர்க்கார், தங்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றி திட்டவட்டமான அறிவிப்பு தராவிடின், 26-ந் தேதி முதல் 18 நாட்களுக்கு—மார்ச் 15-ந் தேதிவரை, 'ஆட்சேப நாட்கள்' அனுசரிப்பது என்று ஊழியர்களின் மத்திய சங்கம் முடிவு செய்திருக்கிறது.

சிவப்பு நிறத்தில், 'துக்கச் சின்னம்' அணிந்துகொண்டு, ஊழியர்கள் ஆட்சேபம் தெரிவிப்பர்.

'சென்னை மாநில சர்க்கார் ஊழியர்கள் சென்னை சர்க்காரால் அலட்சியப்படுத்தப்படுகின்றனர்' என்று தமிழில் எழுதிய அட்டைகளை அவர்கள் அணிந்துகொள்வர் என்றும், இது, சர்க்காரின் போக்கில் அவர்கள் கொண்டுள்ள அதிருப்தியை எடுத்துக்காட்டுவதற்கு என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த முடிவினை சர்க்கார் ஊழியர்கள், சுமார் 5 மணி நேர விவாதத்திற்குப் பிறகு மேற்கொண்டிருக்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்ட ஊழியர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு

சென்னை, பிப். 16—

தேர்தல் நெருங்கும்போது சாகசமான பேச்சுக்களில் ஈடுபடும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் போக்கினை நன்குணர்ந்துள்ள சர்க்கார் ஊழியர்கள், சர்க்கார் தரும் உறுதிமொழிகளை நம்பாமல், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த முற்பட்டிருக்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்ட சர்க்கார் ஊழியர்கள், வரும் பிப். 25-ந் தேதிக்குள் சர்க்கார் தருவதாகக் கூறியுள்ள ரூ. 12 கிராக்கிப்படி உயர்வினை உடனடியாகத் தர வேண்டும் என்றும், பிப்ரவரி 25-ந் தேதிக்குள் இது பற்றி சர்க்கார் திட்டவட்டமான அறிவிப்புத் தராவிட்டால், மார்ச் 2-ந் தேதியன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் முடிவு தெரிவித்திருக்கின்றனர்.

பண்டிதருக்கு தந்தி

சென்னை நகர சர்க்கார் ஊழியர் சங்கக் கூட்டம் ஒன்றில், பண்டித நேருவுக்கு, அவரிடம் நேரில் கோரியிருந்தபடி, உடனடியாக இடைக்கால நிவாரணமளிக்குமாறு தந்தி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

தேர்தலுக்கு முன் அடையாள வேலைநிறுத்தம்

திருச்சி ஊழியர்கள் விருப்பம்

திருச்சி, பிப். 16—

பொதுத் தேர்தலுக்குமுன் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென திருச்சி சர்க்கார் ஊழியர் சங்கத்தவர் ஒருமனதாக முடிவு செய்து, தங்கள் விருப்பத்தை மத்திய சங்கத்திற்குத் தெரிவித்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

தேர்தல் 'ஸ்டண்ட்'

தங்களின் கோரிக்கைகள் பற்றி சர்க்கார் இப்போது தந்துவரும் சில உறுதிமொழிகள் எல்லாம் வெறும் தேர்தல் 'ஸ்டண்ட்'தான் என்றும், எனவே, இந்தத் தேர்தல் நேரத்தில் சர்க்கார் ஊழியர்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுப்புவதே பலன் தரும் என்றும் அந்த ஊழியர்கள் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

பட்டினிப்போர்

சங்கக் கூட்டத்தில் பேசிய ஒருவர், ஒவ்வொரு தாலுகாவிலும் குறைந்தது ஒரு ஊழியர் உண்ணாவிரதம் துவங்க வேண்டும் என்றும் யோசனை கூறியிருக்கிறார்.

சென்னையில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு

சென்னை, பிப். 18—

தேர்தலில் வாக்காளர்கள் ஓட்டு போடும்போது கையாள வேண்டிய முறை, அபேட்சகர்களோ அல்லது அவர்களின் ஏஜெண்டுகளோ நடந்துகொள்ளவேண்டிய முறை ஆகியவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக சென்னை நகரத் தொகுதிகளில் போட்டியிடும் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த அபேட்சகர்களின் கூட்டம் ஒன்றை இம்மாதம் 28-ந் தேதியன்று சென்னை நகரசபை கமிஷனர் (சென்னை நகர பிரதம தேர்தல் அதிகாரி) கூட்டுகிறார்.

தேர்தல் கூட்டங்களில் குழப்பம்

காங்கிரஸ் அபேட்சகர்கள்மீது தாக்குதல்

காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிற்காக, அகமதாபாத் நகருக்கு, குஜராத் பிரதேசக் காங்கிரஸ் தலைவரான தக்கூர்பாய் தேசாயும், மக்கள் சபைக்கு பரோடா தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்பட்டிருக்கும் பரோடா மன்னரும் வந்த போது, நகரின் எல்லையில் மகா குஜராத் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி நின்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர்.

அதன் விளைவாக, தக்கூர்பாய் தேசாய்க்கு தலையிலும் பரோடா மன்னருக்குக் காலிலும் கல்லெறிக் காயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், காலோல் எனுமிடத்தில் நடைபெற்ற ஒரு தேர்தல் பொதுக்கூட்டத்தில் தக்கூர்பாய் தேசாயும் பரோடா மன்னரும் பேசிக்கொண்டிருக்கையில், மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர், கூட்டத்தைக் கலைக்கவேண்டுமென நினைத்துக் கலகம் செய்தனராம்; ஆனாலும், அவர்கள் முயற்சிதோல்வியடைந்துவிட்டதாம. என்றாலும், கூட்டத்தின் முடிவில், மேடையையே தீகொளுத்த அவர்கள் முற்பட்டிருக்கின்றனர் என்று செய்தி ஒன்று அறிவிக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18-2-'57 திங்கள்

சுயநிர்ணய உரிமை

நமது முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளிவந்துவிட்டது. சட்ட மன்றத்திலிருந்து நமது கழகம் எத்தகைய பணியினை மேற்கொள்ள இருக்கிறது என்பது பற்றிய விளக்கத்தை தேர்தல் அறிக்கை தெளிவாக்கி இருக்கிறது.

அந்தத் தேர்தல் அறிக்கையில் தந்திரமும் இல்லை, மக்களை மயங்கவைக்கும் மந்திரமும் இல்லை.

இருதயத் தூய்மையும் புனிதமான செயல் முறையும், தெளிவான நடைமுறையும் என்றுமே பெற்றில்லாத அரசியல் எத்தர்கள் கூறுவது போன்ற சாணக்கியமும் அவ்வறிக்கையில் இல்லை.

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்தில் அடி எடுத்து வைக்கும்பொழுது, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் அதிகாரம் செலுத்தக் கூடிய ஒரு மத்திய ஆட்சி அமைப்பு இருக்கவில்லை. அத்தகைய ஒரு மத்திய ஆட்சி அமைப்பை ஏகாதிபத்தியம் ஒவ்வொருபகுதியிலும் வாழ்ந்து வந்த மக்களின் ஒப்புதல் பெற்று உருவாக்கவுமில்லை. துப்பாக்கி முனையினால்தான் மத்திய ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது என்று சென்ற கால வரலாறு கூறுகிறது.

ஒவ்வொரு பகுதி மக்களின் ஒப்புதல் பெற்றுதான் ஒரு மத்திய ஆட்சி அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் எந்த ஏகாதிபத்தியத்திற்கும் ஏற்படமுடியாது. குறிப்பிட்ட மத்திய ஆட்சியில் இணைவதா கூடாதா எனக் கூறும் உரிமை ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் உண்டு என்ற அரசியல் நியாயத்தையும் எந்த ஏகாதிபத்தியமும் ஒப்புக்கொள்ளவும் முன்வராது.

மக்கள் கருத்தறியாது, துப்பாக்கி முனைகாட்டி அச்சுறுத்தி, தன்னையே இந்தியத் துணைக் கண்டத்தில் திணித்துக்கொள்ள முன்வந்தபொழுது ஒவ்வொரு பகுதி மக்களின் ஒப்புதல் பெற்றுதான் ஒரு மத்திய ஆட்சி அமைப்பை நிறுவ முயற்சிப்பதே நியாயமாகும் என, ஆங்கில ஏகாதிபத்தியமா எண்ண முன்வரும்? அந்த அரசியல் நேர்மையை அதனிடத்தில் எதிர்பார்ப்பதும் முறையாகாது.

ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி உரிமையைப் பெற்ற காங்கிரசுக் கட்சியாவது, அந்தந்தப் பகுதியின் ஆட்சி உரிமையை அந்தந்தப் பகுதி மக்களிடம் ஒப்படைக்க முனைந்திருக்க வேண்டும். அவ்வாறு தாராளமாக நடந்துகொள்ள காங்கிரசுத் தலைமைக்கு விருப்பமில்லையானாலும், தனது கட்சியின் ஆரம்பக் கால இலட்சியப்படி, ஒரு மத்திய ஆட்சியில் இணையும் ஒவ்வொரு உறுப்பும் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பையாவது ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் காங்கிரசுத் தலைமையோ, தான் முன்னாள் தந்த வாக்குறுதிப்படியும் நடந்துகொள்ளவில்லை. ஆங்கில ஏகாதிபத்திய அரசுபோலவே பலம் பொருந்திய இந்தியப் பேரரசு ஏற்பாட்டை அமைத்துக்கொண்டுள்ளது.

அவ்வாறு அமைக்கப்பட்ட இந்தியப் பேரரசில் அதிகாரம் அனைத்தும் குவிக்கப்பட்டு, அதில் இணைந்துள்ள அங்கங்களின் அதிகாரம் மிகுதியாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. மாநிலங்களுக்கும் பேரரசிற்கும் இருந்துவரும் அதிகார உறவுமுறை திருப்திகரமானதாக இல்லை. எனவே, இந்தியப் பேரரசின் அதிகாரத்தைக் குறைத்து, அவ்வாறு குறைத்த அளவிற்கு மாநிலங்களின் அதிகாரத்தைக் கூட்ட வேண்டும் என்ற கருத்து கொந்தளிப்பாக மாறி இருக்கிறது. இக்கொந்தளிப்பு பரவலாகவும் இருந்து வருகிறது.

நாட்டு மக்களிடை பரவலாகவும் கனிசமாகவும் இருந்து வரும் அதிகாரம் பரவலாக வேண்டும் என்ற கருத்தை நமது கழகம் சட்ட மன்றத்திலிருந்து வலியுறுத்தும். அதற்கான உறுதிப்பாட்டை, தனது தேர்தல் அறிக்கையில் நமது கழகம் தந்துள்ளது.

அதிகாரத்தைப் பரவலாக்க விரும்பாது, மத்திய ஆட்சியிலேயே குவிக்கவேண்டும் என்பதின் உள்ளடக்கமே ஆதிபத்திய முனைப்பாகும். அந்த முனைப்பின் ஆரம்ப எதிரொலிதான் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற விருப்பம். அது காலப் போக்கில் வேறு உருமாற்றம் கொள்ளக் கூடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

அதிகாரத்தை ஓரிடத்திலேயே குவிக்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்கு எதிராக அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படுவதற்கு இடமில்லாமலே, காங்கிரசுத் தலைமை விரும்பி இருந்தால், ஏற்கனவே செய்திருக்க முடியும். அதாவது இந்தியத் துணைக் கண்டத்திற்கான அரசியல் சட்டம் தீட்டியபொழுதே, மாநிலங்களின் சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கி சட்டம் இயற்றி இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யப்பட்டிருக்குமானால், சுயநிர்ணய உரிமை பெற்றுள்ள மாநிலங்கள் பிரிந்து சென்றுவிட முன்வரக்கூடும் என்ற எண்ணத்தில், சர்வாதிகாரம்கொண்ட பேரரசாக இந்தியப் பேரரசை ஆக்கவும், மாநிலங்களை அதிகாரமே இல்லாத ஆட்சி அமைப்புகளாக ஆக்கவும் காங்கிரசுக் கட்சியின் முதல் நிலைத் தலைமை முன்வந்திருக்காது. எனவே, இந்தியப் பேரரசின் எதேச்சாதிகாரத்தைக் குறைக்கவும் சிறப்பான அதிகாரங்கள் பலவும் பெற்ற சுயாட்சி அரசுகளாக மாநிலங்கள் விளங்கவும், ஏற்கனவே இடம்பெறத் தவறிய மாநிலங்களின் 'சுயநிர்ணய உரிமை'யை அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சட்ட மன்றத்திலிருந்து வாதாடுவது என முன்னேற்றக் கழகம் முடிவு கட்டி இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் இம்முடிவு இடம்பெற்றிருக்கிறது.

'சுயநிர்ணய உரிமை' தத்துவத்தை மறுக்கின்றவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் மனித உரிமையை மறுக்கின்றவர்களேயாவர். அவர்கள் மக்களாட்சியின் ஆக்கத்திற்குக் கேடு சூழ்கின்றவர்களுமாவர்.

'சுயநிர்ணய உரிமை' மக்களாட்சிக் கோட்பாட்டின் உயிர்நாடியாகும். அதை மறுப்பவர்கள், அதிலும் மக்களாட்சியின் மாண்பு பற்றிப் பேசிக்கொண்டே மறுக்க முன்வருபவர்கள், பசுத்தோல் போர்த்த புலியாவர். வாய்ப்பு நேர்ந்தால் மக்களாட்சியையே குழிதோண்டிப் புதைத்து கல்லறையும் கட்டிவிட்டு, அதன்மேல் அமர்ந்துகொண்டு 'இதுதான் நாங்கள்விரும்பிய மக்களாட்சி' எனக் கத்தவும் செய்வர். அத்தகையவர்கள் இந்தப் பொதுத் தேர்தலில் கலந்து கொள்வது மக்களாட்சியை மேலும் வளப்படுத்துவதற்கன்று; ஆனால் வெளிநாட்டிலோ செய்துகொண்டுள்ள உடன்பாட்டின்படி வெறும் உருவ அளவில் செயல்பட்டுவரும் இந்த அரைகுறை மக்களாட்சியையும் அழித்தொழித்து, தங்கள் விருப்பமான பயங்கர சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கேயாகும். எனவே, சனநாயகப் போர்வையில் தேர்தல் களம் புகுந்துள்ள சர்வாதிகார வெறியர்களைக் கண்டுபிடித்து, அவர்களை மண்ணைக் கவ்வச் செய்ய வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

'சுயநிர்ணய உரிமை' தத்துவத்தை இந்தியப் பிரதமர் காஷ்மீர் மக்களைப் பொறுத்த வரையில் நியாயமானது என ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, நேரு பண்டிதராலேயே நியாயமானது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள 'சுயநிர்ணய உரிமை'யை காஷ்மீர் மக்களே மட்டுமல்லாது மற்றவர்களும் பெற்றாக வேண்டும் எனக் கோருவதில் நியாய விரோதம் எதுவும் இருக்க முடியாது.

இலங்கையில் தமிழருக்கு நிலம் விற்கத் தடை!

சிறிது காலம் ஒத்திவைக்க ஏற்பாடாம்

கொழும்பு, பிப். 16—

இலங்கையரல்லாதாருக்கு அங்கு நிலங்கள் விற்பதைத் தடை செய்ய வேண்டுமென்று, இலங்கைவாழ் தமிழருக்கு விரோதமாக முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால் இங்கு நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இலங்கைப் பிரதமர் பண்டார, இலங்கை குடியுரிமை கோரிச் செய்யப்பட்டுள்ள மனுக்கள் பைசலாகுமவரை இத்தகைய தடை விதிப்பு அவசியம் இல்லை' என்று கூறி நிராகரித்துவிட்டதின் மூலம், அந்தத் தீய முயற்சிகள் முறியடிக்கப்பட்டுவிட்டனவாம்.

இலங்கைக் குடிமக்களாகப் பலருக்கு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. அப்பீல்களைப் பரிசீலிக்க இதுவரை ஒரே நீதிபதி இருந்து வந்துள்ளார். இப்போது இரண்டு நீதிபதிகள் கவனித்து வருகின்றனராம்.

நெய்வேலி அருகே

தொழில்நுணுக்கப் பயிற்சிநிலையம்

சென்னை, பிப் 15—

நிலக்கரிச் சுரங்க வேலைகளுக்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த 'போர்மென்'கள், 'சூபர்வைசர்'கள் ஆகியவர்களைப் பயிற்றுவிப்பதற்கென, நெய்வேலி திட்டப் பகுதியை அடுத்து ஒரு பயிற்சி நிறுவனத்தை அமைக்கும் திட்டத்தில் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்க நிறுவனம் பங்கேற்றுக்கொள்ளுவதென முடிவு செய்திருக்கிறதாம். இந்தப் பயிற்சிச்சாலையில் முதலில் 50 பேர் பயிற்சியளிக்கப்பட்டு, பயிற்சி முடிவுக்குப் பின், திட்ட வேலைகளில் அமர்த்தப்படுவாராம்.

இதுபோல் எஞ்சினீயரிங் துறை போர்மென்கள், சூபர்வைசர்களுக்கான 3 பயிற்சி நிலையங்கள் கோவையிலும் பெங்களூரிலும் சென்னையிலும் நிறுவப்பட இருக்கின்றன என்றும் அவைகள் ஒவ்வொன்றிலும் 50 பேர் பயிற்சி பெறுவர் என்றும் தெரியவருகிறது.

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் பயிலும் மாணவர்களில் 50 சத விகிதத்தினருக்கு அவரவர் தகுதியைப் பொறுத்து முதல் இரண்டு வருடத்திற்கு ரூ. 40 வீதமும், இறுதி இரண்டு வருடங்களில் ரூ. 50 வீதமும் உபகாரச் சம்பளம் தரப்படுமாம். மற்ற 50 சத விகித மாணவர்களுக்கும், அந்தந்த தொழிற்சாலைகள் ஒரு குறிப்பிட்ட அளவு தொகை தரப்படுமாம்.

இப்படி 50 பேருக்குப் பயிற்சியளிக்கக்கூடிய வசதியுடன் கூடிய ஒரு பயிற்சிச் சாலைக்கான கட்டிடங்கள், சாதனங்கள் போன்றவற்றின் செலவு ரூ. 10 இலட்சம் ஆகலாமென்றும், இவை ஒவ்வொன்றின் வருடச் செலவு — உபகாரச் சம்பளங்கள் உட்பட ரூ 1,83 000 செலவு ஏற்படுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

*-***************-*

கேள்வியும் - பதிலும்

கேள்வி: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்தான் கம்யூனிஸ்டுகள் இலட்சியம்; அவர்களுக்கு பார்லிமெண்டரி சனநாயகத்தில் நம்பிக்கை இல்லை' என்றும், 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் நடைமுறைக்கு உதவாத தத்துவம்' என்றும் நேரு பேசினாரே! இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற தத்துவம் இன்று நடக்கும் தேர்தலில் வரும் தேர்தல் பிரச்சினையல்ல. அடுத்த மாதம் நடக்கப்போகும் தேர்தலில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காக ஓட்டுப் போடுங்கள் என்று கம்யூனிஸ்டுகள் கேட்கவில்லை.

....

பார்லிமெண்டரி சனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்றால் கம்யூனிஸ்டுகள் சென்ற 5 ஆண்டுகளாக பார்லிமெண்டிலும் சட்டசபைகளிலும் வேலை செய்திருப்பார்களா?

மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு மீண்டும் பலமான சட்டசபை எதிர்ப்பாக தன்னையும் தன்போன்ற சனநாயகக் கட்சிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி கேட்குமா?

— ஜனசக்தி' 3-2-57

****-**********-****

குருட்டுத்தனமாக

காங்கிரசுக்கு ஓட்டளிக்காதீர்

கட்டாக், பிப். 15—

'காங்கிரசுக்கே வாக்களியுங்கள் என்று கட்டாயப்படுத்த முடியாது; யோசனைதான் கூற முடியும். நீங்கள் குருட்டுத்தனமாக ஓட்டளிக்கக் கூடாது என்பதால், எனது யோசனையை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"விவகாரங்களை ஆராய்ந்தபின் அளிக்கப்படும் வாக்குதான் சரியான வாக்காகும். மக்கள் சிந்தித்து ஓட்டளித்தாலன்றி நாம் எந்தப் பெரிய காரியத்தையும் சாதிக்க முடியாது,"

என்பதாகப் பண்டிதர், தேர்தல் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

மலாயரல்லாதாருக்கு சம உரிமைவேண்டும்

சிங்கப்பூர் பிப். 16—

மலாயா, சிங்கப்பூரில் வாழும் மலாயரல்லாதாருக்கு, சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் இது ஒன்றின் மூலமே நாட்டின் அமைதியையும் நல்ல எதிர்காலமும் உருவாக முடியும் என்றும் மலாயா வாழ் இந்திய, சீனத் தலைவர்கள் கோரிக்கை எழுப்பி வருகின்றனர்.

'சுதந்திர மலாயாவில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் சரி சம உரிமை பெறவிருக்கவேண்டும்' என்று மலாயா சீனர் சங்கத்தின் தலைவர் கூறியிருக்கிறார்.

இங்கு வசித்துவரும் இந்தியாவில பெரும்பான்மையினரான தமிழர்கள் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தந்திருக்கின்றனர். ஆனால் மலாயாவிலேயே பிறந்து வளர்ந்த தமிழர்கள் ஒன்றுகூடி, இந்தியாவில் பிறந்து மலாயாவில் வாழும் தமிழர்களுக்கு எதிராகத் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கென புதிய தோர் அமைப்பு நிறுவவேண்டுமென திட்டமிட்டு முயற்சி செய்து வருகின்றனராம்.

இவர்கள் இங்கு தமிழ் பிரதிநிதித்துவச் சபையின் தலைமையை எதிர்க்கிறார்களாம். மலாயாவில் பிறக்காதவர்களே பெரும்பான்மையினராக இருந்து அவர்களது ஆதிக்கத்தில் அந்தச் சபை இருப்பதே தங்கள் எதிர்ப்புக்குக் காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

மாஸ்கோவில் மாறுதல்கள்

மாஸ்கோ, பிப் 15—

கம்யூனிஸ்டுக் கட்சியின் பத்திரிகையான 'பிராவ்டா'வில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் அயல்நாட்டு அமைச்சராகப் பதவிப் பெற்று, மத்தியக் கிழக்கில் தீவிரமான கொள்கையைப் பின்பற்றி வந்த ஷெபிலவ் இப்போது வேறு வேலைக்கு மாற்றப்பட்டுள்ளாராம்.

அவருக்குப் பதிலாக, குரோமிகோ என்பவர் அயல் நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளாராம்.

இசை அரசு தண்டபாணி தேசிகர்

அகில இந்திய ரேடியோ சங்கீத விற்பன்னர் குழுவின் தென்பகுதிக்குழு உறுப்பினராகத் திரு. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் ஒரு ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நாடு முழுமையிலும் தயாரிக்கப்படும் பல ரக கைத்தறித் துணிகளைக் கண்ணுக்குக் கவர்ச்சியான முறையில் வைத்து வாணிபத் துறையை ஊக்குவிக்க ஒரு 'கைத்தறி மாளிகை'யை சென்னையில் ஏற்படுத்தப்படும்.

கட்சி-கொள்கையில்லாத அரசியல் 'வௌவால்'களை ஆதரிக்காதீர்கள்

சென்னைக் கூட்டத்தில் க. அன்பழகன்

சென்னை, பிப். 15—

சென்னை - வரதராசப்பேட்டை யில் (கோடம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்) 35-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடந்த 13-ந் தேதியன்று மாலை தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் செ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் இராபர்ட் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர் தரணி சிறிதுநேரம் பேசினதும், அடுத்து தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசும் போது, 'எந்த ஒரு கட்சியும் கொள்கையும் இன்றி தன்னிச்சையாகக் காலத்திற்கேற்றவாறு கலந்து கொள்ளும் அரசியல் 'வௌவால்'களை தயவுசெய்து பொதுமக்கள் ஆதரிக்கவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர் தோழர் ஏ எஸ் ஜேசுபாதம் அவர்கள், மாற்றார் தேர்தலுக்காகச் செய்யும் தில்லுமுல்லுகளை மக்களிடையே விளக்கியும் கழகத் தோழர்கள் எந்த ஒரு சிறு இலாபத்தையும் கருதாது உழைத்து ஆதரவு தேடும் பண்பினை எடுத்துக் காட்டியும் பொது மக்கள் தமக்கு ஆதரவு தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து வரதராசப்பேட்டை கிராமத் தலைவர்-வயோதிகர் திரு சுப்பிரமணியம் அவர்கள், ஏழைகளின் சார்பில் நிற்கும் தோழர் ஜேசுபாதம் அவர்களையும் பாராளுமன்றத்திற்கு போட்டியிடும் பி. பாலசுப்பிரமணியம் அவர்களையும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இறுதியில், திரு. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸ் பாசிச ஆட்சி நடத்துகிறதென்றும் அதில் சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறதென்றும் அதனை ஒழித்து நல்லாட்சி நிறுவ தி. மு. கழகம் பாடுபடுகிறதென்றும், அதன் சார்பாக நிற்கும் தனக்கும் தோழர் ஜேசுபாதம் அவர்களுக்கும் மக்கள் ஆதரவு தந்து ஓட்டளிக்கும்படி கேட்டுக்கொண்டும் ஆங்கிலத்தில் பேசினார்.

தோழர்கள் க. அறிவழகன் அவர்கள், திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய பேச்சை மொழி பெயர்த்துக் கூறினார்.

தென்னாடு-பூட்டில்லாத வீடு

செல்வம் களவாடப்படுவதைத் தடுக்க வேண்டாமா?

சென்னைக் கூட்டத்தில் தோழர் அன்பழகன் முழக்கம்

சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிடும் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து பெத்துநாய்க்கன்பேட்டையில் கடந்த 13-ந் தேதியன்று நடைபெற்ற போதக்கூட்டம் ஒன்றில் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்பட்டிருக்கிறது:—

"தேர்தல் என்பது அந்தந்தக் காலத்தில் பொதுமக்கள் தங்களுக்கான நல்லாட்சியை அமைத்துக் கொள்ளக் கிடைக்கின்ற நல்ல சந்தர்ப்பமாகும். இதைத் தவிர வேறு சந்தர்ப்பமே கிடையாது.

"ஒரு வாலிபனிடம் அவனுடைய பெற்றோர்கள் ஒரு பெண்ணைக் காட்டி, 'இவளைத் திருமணம் செய்துகொள்கிறாயா?' என்று கேட்டால், அதற்கு அர்த்தமென்ன? 'இந்தப் பெண்ணை உனக்குப் பிடித்திருக்கிறதா?' என்று கேட்பதற்குப் பதிலாகத்தான் 'இவளை திருமணம் செய்துகொள்கிறாயா?' என்று மறைமுகமாகக் கேட்கிறார்கள். அதுபோலத்தான் 'தேர்தல் வருகிறது' என்பது, 'இந்த ஆட்சி மக்களுக்குப் பிடித்திருக்கிறதா, இல்லையா?'—என்பதைத் தெரிந்துகொள்ள நடைபெறும் ஒன்றுதான். திருமண மாப்பிள்ளையிடம், 'பெண்ணைப் பிடிக்கிறதா?' என்று கேட்பது போலத்தான் இந்தத் தேர்தலும், மக்களைப் பார்த்து, 'இந்த ஆட்சி உங்களுக்குப் பிடித்திருக்கிறதா, இல்லையா?' என்று கேட்கிறது!

"இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடாவிட்டால், இந்த சர்க்கார் வேண்டுமா வேண்டாமா என்பதை மக்கள் எந்த அடிப்படையிலிருந்து நிணயிப்பார்கள்— தீர்மானிப்பார்கள்?

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடாவிட்டால் இன்று இந்த நாட்டில் காங்கிரசை எதிர்ப்பவர்கள் யார்? அவர்களெல்லாம் வெறும் அநாமதேயங்களாக இருப்பார்கள்; அவர்களுக்கென்று ஒருகட்சியோ கொள்கையோ இருக்காதே! அப்படியானால் எந்த அடிப்படையில் அவர்களை மக்கள் ஆதரிப்பார்கள்? எனவே, கொள்கை அளவில் இக்காங்கிரசை எதிர்த்தால்தான் நீதி இன்னதென்று மக்களுக்குப் புலனாகும் என்ற கருத்துடன்தான் தி. மு. கழகம் போட்டியிட முன்வந்திருக்கிறது.

"திருடினவனுக்குக்கூட நீதிமன்றத்தில் வாதாட வக்கீல்கள் இருக்கிறார்கள்! ஆனால் நாட்டில் வாழும் மக்களின் நலன்களுக்காக வாதாட சட்டசபையில் உருவான எதிர்க்கட்சி இன்றுவரை இருந்ததில்லையே! என்றாலும், கடந்த 7 ஆண்டுகளாக சட்டசபையிலே இல்லாவிட்டாலும் வெளியிலாவது ஒரு எதிர்க்கட்சி என்ற முறையுடன்—எதிர்க்கட்சிக்கு என்னென்ன இலக்கணம் தேவையோ அவைகளையெல்லாம் கொண்ட ஒரு கட்சி உலவி—சட்டசபைக்குள்ளே இருந்துகொண்டே செய்யவேண்டியவற்றையெல்லாம் வெளியே நல்ல முறையில் செய்து வந்திருக்கிறதென்றால், அந்தக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுமட்டும்தான். அது ஒன்று மட்டுமேதான் சட்ட சபைக்கு உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் நாட்டு மக்களுக்காகப் பாடுபடும் ஒரே இயக்கமாகும்.

"இதுவரையில் காங்கிரசார் சாதித்ததென்ன? இப்போது அவர்கள் தேர்தலுக்காக வெளியிட்டிருக்கிற 'போஸ்டர்'களை நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள். அது எப்படி இருக்கிறது தெரியுமா? 'ஏழை குழந்தைகளுக்கு இலவசக் கல்வி' என்ற தலைப்பில் ஒரு போஸ்டர் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த இலவசக் கல்வி இப்போதுதானா கிடைத்து வருகிறது? இல்லையே! காமராசருக்கு முன்பிருந்தே கிடைத்து வருகிறது!

"அந்தப் போஸ்டர் எப்படி போடப்பட்டிருக்கிறது? இரண்டு குழந்தைகள் நேராகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்குப் பின்னால் சிலேட்டும் புத்தகமும் காணப்படுகின்றன! வேடிக்கையாக இல்லையா பார்ப்பதற்கு? படிக்கிற குழந்தைகள் என்றால், புத்தகமும் சிலேட்டும் அவர்களுக்குப்பின்னாலேயா இருக்கும்?

"இன்றைக்கு இருக்கிற நிலையில் அண்டை நாட்டு மக்களான ஆந்திர

(5-ம் கலம் பார்க்க)

யுத்தமா — சமாதானமா?

முடிவெடுக்க வேண்டியது

டெல்லி!

வெளிநாட்டு விவகாரங்கள், ஒப்பந்தங்கள்

தீர்மானிக்க வேண்டியது

டெல்லி!

பாதுகாப்பு—இராணுவம்

நிர்வகிக்க வேண்டியது

டெல்லி!

இரயில்—கப்பல்—விமானப் போக்குவரத்து

நடத்த வேண்டியது

டெல்லி!

தபால்—தந்தி—தொலைபேசி

ஏற்பாடுகள் செய்வது

டெல்லி!

நாணயம், செலாவணி

செல்லுபடியாக்குவது

டெல்லி!

ஏற்றுமதி—இறக்குமதி

அனுமதி தர வேண்டியது

டெல்லி!

பூமிக்கடியில் உள்ள பொன்னும் பொருளும்

தோண்டி எடுக்கவேண்டியது

டெல்லி!

இப்படி

அதிகாரங்களனைத்தும் படைத்த 'எல்லாம் வல்ல இறைவன்'

ஆக்கப்பட்டிருக்கிறது

டெல்லி-

இந்திய அரசியல் சட்டத்தால்!

★

இந்த 'இறைவ'னின் 'கடாட்ச'த்திற்காக காவடி எடுக்க வேண்டியிருக்கிறது

தென்னாடு!

★

இதனால்தான்

'மத்திய சர்க்காரை ஆட்டவும் அசைக்கவும் முடியாது' என்கிறார் பண்டிதர்!

இதனைத்தான்

'ஏக இந்திய' மகிமை என்கின்றனர் இங்குள்ள 'அகில இந்தியா'க்கள்!

இந்த நிலையை

'ஆட்டி வைப்போர் வடக்கே- ஆடும் பதுமைகள் தெற்கே'

என்று கூறுகிறது

தி. மு. க.

★

பெற்ற தாயை வெள்ளாட்டியாக்கும் 'அகில இந்தியப் பித்தர்'களுக்கா உங்கள் வாக்கு?

★

ஆதிக்கம் அழிய—உரிமை பெற தி. மு. கழக அபேட்சகர்களுக்கே உங்கள் ஓட்டுகளைத் தாரீர்!

தென்னாடு பூட்டில்லாத வீடு

(2-ம் கலத் தொடர்ச்சி)

மும் கேரளமும் அடைந்துள்ள முன்னேற்றத்தைக்கூட நமது தமிழக மக்கள் பெற்றிருக்கவில்லை. மற்றவர்களாவது தங்களுடைய நாட்டிற்கு தங்கள் மொழிப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள்; ஆனால் தமிழர்களுக்கோ, தங்கள் நாட்டின் பெயர் தங்கள் மொழியில் இல்லை; அவர்களுடைய பகுதிகள் அவர்களிடமில்லை. இப்படி தமிழ் நாடு என்ற பெயரில்லை— மக்கள் வாழ்விலே வளமில்லை; அவர்களுடைய முன்னேற்றத்திற்கெல்லாம் தடைகள் ஏற்பட்டுத் தாழ்ந்துவிடக்கிறார்கள்; இந்த நிலையில் இன்னும் காமராசர் இந்த நாட்டை ஆளவேண்டுமென்றால் அது நீதி அல்ல—நேர்மை அல்ல!

"நாம் விரும்புவது ஜனநாயக ஆட்சியை! அந்த ஆட்சியில், காமராசரே வேண்டுமானாலும்கூட முதலமைச்சராக இருக்கட்டும்; சுப்பிரமணியமே இருக்கட்டும்—இன்னும் கொஞ்ச காலத்திற்கு நிதி அமைச்சராக, கொஞ்சம் மதிப்புடன் வாழ்ந்துகொள்ளட்டும்! ஆனால் அந்த சர்க்காருக்கு எதிராக நல்லதோர் எதிர்க்கட்சி வேண்டும். அந்த எதிர்க்கட்சி கடைசிவரையிலும் நேர்மையோடும் நாணயத்தோடும் கடமையாற்றி, நாட்டு மக்களுக்கு உண்மை உழைப்பாளியாக இருக்கவேண்டும்; அந்த முறையில் ஜனநாயகம் நாட்டில் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறது.

"அழகான வீடு ஒன்று அமைத்து அந்த வீட்டிற்கு நிலையான கதவும் அமைத்த பிறகு அதற்குப் பூட்டு மட்டும் இல்லையென்றால் எப்படி வீட்டிலுள்ள பொருள்கள் களவாடப்பட்டு விடுமோ, அதுபோலவேதான் நமது நாட்டிலும் சரியான ஒரு எதிர்க்கட்சி என்ற பூட்டு இந்த நாட்டிற்கு இல்லாத காரணத்தால், இந்த நாட்டின் பொருள் களவாடப்படுகிறது. களவாடப்படுகிற பொருள்—இந்த நாட்டின் செல்வம் வடநாட்டவரின் கைக்குச் சென்றுவிடுகிறது.

"வீடும் இருக்கும்-கதவும் இருக்கும்—ஆனால் பூட்டு மட்டும் வேண்டாம் என்று சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? இந்த நாட்டில் சட்டசபையும் கிடையாது; ஜனநாயகமும் வேண்டாமென்றால எதிர்க் கட்சியும் கூடத்தான் தேவையில்லை. ஆனால், சட்டசபையும் உண்டு; ஜனநாயகமும் நடைபெற வேண்டும் என்று கூறினால், எதிர்க் கட்சி இல்லாமல் முடியாதே!

"இந்த நாட்டில் எதிர்க் கட்சி அமைவதை நேரு பண்டிதர் விரும்பமாட்டார்; காமராசருக்குக் கவலை இருக்காது; பெரியார், ஆதரவும் தரமாட்டார்; ஏனெனில், அவர்களுக்கெல்லாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாது. ஆனால் நாம், ஜனநாயகம் இந்த நாட்டில் செம்மையாக நடைபெற வேண்டுமென விழைகிறோம். எனவே, நாம்தான் எதிர்க் கட்சியை உருவாக்க வேண்டும். அப்படி சிறந்த எதிர்க் கட்சியை உருவாக்க, கழகத் தோழர்கள் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் கேட்க வேண்டும்—'இந்த நாட்டில் எதிர்க்கட்சி வேண்டுமா-வேண்டாமா?' என்று! 'இனிமேலும் இந்த நாட்டில் இருள் சூழவிடக் கூடாது; இருளை அகற்ற உதய சூரியன் வரத் தடை கூடாது' என்று எடுத்துக் கூறுங்கள். 'உதய சூரியன் பெட்டிதான் நேர்மைக்கு இடமுள்ள பெட்டி—உங்களுடைய பெட்டி—பொதுமக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெட்டி—ஜனநாயகக் கொள்கை நிரம்பிய பெட்டி' என்ற நம்பிக்கையை மக்களிடம் ஊட்ட தோழர்கள் முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்."

டெலிபோன் எண் :

சென்னையில் தோழியர் சத்திய வாணி முத்து அவர்களுக்கு 'டெலிபோன்' வசதி செய்து தரப்பட்டுள்ளது. டெலிபோன் எண் 2037.

தி. மு. கழகத் தேர்தல் நிதி பொதுக் கூட்டம்

ஒத்திவைப்பு

சென்னை மருத்துவர் சார்பில் 19—2—57ல் நடைபெற இருந்த தி மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, 24—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 30-வது வட்டம் சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

தி. மு. க. தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம்

20—2—57 காலை 9 மணிக்கு, தஞ்சை இராமநாதன் செட்டியார் மண்டபத்தில், தோழர் எஸ். பெத்தண்ணன் தலைமையில் நகர தி. மு. கழகச் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'தி. மு. கழகமும் பொதுத் தேர்தலும்' என்ற தலைப்பிலும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 'கலைஞர்களும் பொது வாழ்வும்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றுவர்.

ஆசிரியருக்குக் கடிதம்

சென்னை-பெரம்பூர் தொகுதியில் சோஷலிஸ்டு தலைவர் போக்கு

ஐயா,

சோஷலிஸ்டுக் கட்சிதான் திட்டவட்டமான—தெளிவான அரசியல் திட்டத்துடன் தேர்தலில் ஈடுபடும் ஒரே அரசியல் கட்சி என்று தவங்கி, தங்கள் கட்சி அபேட்சகர்களுக்கு வெற்றிதேடித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, திரு எஸ் சி சி. அந்தோணி பிள்ளை அவர்கள், பெரம்பூர் வட்டாரத்திலுள்ள சில மன்றங்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'தி மு கழகத்திற்கு எந்தவிதத் திட்டமும் இல்லை' என்றும், 'அவர்களது சாதிப் பாகுபாடு ஒழிப்புப் போன்றவைகூட அரசியல் பிரச்சினைகள் அல்ல' என்றும், இன்னும் இது போன்றும் தி. மு. கழகத்தைப் பற்றித் தாறுமாறாகக் கூறிவிட்டு இத்தகைய தி மு. கழகத்தினருக்கு, பெரம்பூர் தனித் தொகுதியை விட்டுக் கொடுத்துவிட வேண்டுமெனக் கேட்பது அநியாயம் என்றும் குறிப்பிட்டிருப்பதாக அறிகிறேன்.

தி மு. கழக ஆதரவாளர்—தமிழ்ப் பெரியார்—தொழிலாளர் இயக்கம் கண்ட மாபெரும் தலைவர் திரு. வி. க. அவர்களின் பிரதிபிம்பமாய் விளங்கிவரும் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் கட்டுக்கோப்பை சிதைக்கச் செய்வதற்கு, தீய சக்திகள் சில தவ்வப்போது தப்பாசையால் கையாண்ட நடவடிக்கைகளை சென்னையிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள் அனைவரும் அறிவர். அண்மையில் அத்தீயசக்திகள் முழுமூச்சாகத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் துடித்தபோது, அந்த எண்ணத்தைத் தகர்த்தெறியும் வகையில் சென்னைத் தொழிற் சங்கத்திற்கு உற்றதுணையாய் இருந்து பணியாற்றியது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை சென்னைத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் ஒருக்கால் இன்று மறந்தாலும், அதன் உறுப்பினர்களும் ஆலைத் தொழிலாளர்களும் மனதார இவ்வுண்மையை உணர்வர்.

இவ்விதத் தொடர்பும் தொழிலாளர் உரிமைப் பிரச்சினையில் மிகுந்த அக்கறையுமுடைய தி மு கழகம், சென்னை சட்டசபைத் தேர்தலில் பெரம்பூர் தனித் தொகுதிக்கு மட்டும் அபேட்சகரை நிறுத்தி, பொதுத் தொகுதிக்கும் வடசென்னை பாலிமெண்டு தொகுதிக்கும் அபேட்சகர்களை நிறுத்தவில்லை. அத்தொகுதியிலுள்ள தி மு. கழகத் தோழர்களும் ஆலையிலுள்ள தொழிலாளத் தோழர்களும், அந்தத் தொகுதியில் கழக அபேட்சகர்களை நிறுத்த வேண்டுமென வற்புறுத்தியும்கூட, அரசியல் கண்ணியத்தைக் காப்பதற்காக, அத்தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவதற்குத் தலைமைக் கழகம் சம்மதிக்கவில்லை.

தொழிற்சங்கத்திற்கு வந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்குக் கழகம் துணை நின்ற போதும், தொழிலாளர் போராட்டங்களுக்கு கழகம் ஆதரவு தந்தபோதும், கழகத்தின் கொள்கை கோட்பாடுகளில் குறை காணத் துணியாத திரு. எஸ் சி சி அந்தோணிப் பிள்ளை அவர்கள், இப்போது மட்டும் கழகம் பற்றிய விமர்சனத்தில் ஈடுபட்டிருப்பது வேடிக்கையாயிருக்கிறது. 'எங்களுக்கு இத்தொகுதியில் விட்டுக் கொடுங்கள்' என்று சோஷலிஸ்டுகள், கழகத் தலைவர்களைக் கேட்டதை அதற்குள் மறந்துவிட்டாரா என்பதும் தெரியவில்லை.

தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, இதுபோன்ற சந்தர்ப்ப வாதங்களில் ஈடுபட்டிருக்கும் திரு அந்தோணிப்பிள்ளையவர்களின் இந்தப் போக்கை ஆலைத் தொழிலாளர்களாயுள்ள கழகத் தோழர்களும் மற்ற இனக் கழகத் தோழர்களும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள
சு. பாலன்,
எம். எல் பு. உறுப்பினர்;
சென்னை மாவட்ட தி மு. க. உறுப்பினர்.

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன் சுற்றுப்பயண விவரம்

பிப். 19 : காலை 8 மணி — வழுதாவூர்; 9 மணி: விழுப்புரம் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 2 மணி: மாயவரம் (சிறப்புக் கூட்டம்); 4 மணி: பொறையார் (சிறப்புக் கூட்டம்) 5 மணி: நாகூர் (சிறப்புக் கூட்டம்); 6 மணி: நாகை: இரவு 8 மணி: குடந்தை (சிறப்புக் கூட்டம்); 10 மணி: அதிராம்பட்டினம்; 11 மணி: பட்டுக்கோட்டை (சிறப்புக் கூட்டம்); 12 மணி: மன்னார்குடி (நாடகத் தலைமை).

பிப். 20 : காலை 9 மணி: தஞ்சை (சிறப்புக் கூட்டம்); 11 - மணி: கந்தர்வகோட்டை (பொதுக்கூட்டம்); பகல் 1 மணி: லால்குடி (பொதுக் கூட்டம்); மாலை 4 மணி: (சேலம்)வேலூர் (பொதுக் கூட்டம்); 6 மணி: கரூர் (சிறப்புக்கூட்டம்); இரவு 10 மணி: திண்டுக்கல் 'இன்பக் கனவு' நாடகம்.

பிப். 21 : காலை 9 மணி: சித்தையன் கோட்டை; 11 மணி: பட்டிவீரன்பட்டி; பிற்பகல் 4 மணி; உடுமலைப்பேட்டை தொகுதி.

பிப். 22, 23, 24 : நாகர்கோயில் — நாடகங்கள்.

பிப். 25 : காலை 10 மணி: ஸ்ரீவில்லிபுத்தூர் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 4 மணி: திருக்கோட்டியூர் தொகுதி

பிப். 26 : காலை 10 மணி: கம்பம் (சிறப்புக்கூட்டம்); பகல் 12 மணி: உத்தமபாளையம் தொகுதி; பிற்பகல் 4 மணி: தேனி தொகுதி.

பிப். 27 : இரவு 9 மணி: மதுரை—'சுமைதாங்கி' நாடகம்.

மார்ச் 1 : காஞ்சிபுரம் தொகுதி.

மார்ச் 2 : காலை 8 மணி: லால்பேட்டை; 9-30 மணி: சிதம்பரம் (சிறப்புக் கூட்டம்); 10-30 மணி: திருமுஷ்ணம்; பிற்பகல் 2 மணி: நெல்லிக்குப்பம்; 4 மணி: கடலூர்; 6 மணி: கள்ளக்குறிச்சி.

மார்ச் 3 : சேலம் தொகுதி.

மார்ச் 4 : காலை 10 மணி: அரூர்; 12 மணி: சிங்காரப்பேட்டை; பிற்பகல் 3 மணி: திருப்பத்தூர் (வ.ஆ.); 5 மணி: கந்திரி; 6-30 மணி: ஜோலார்பேட்டை; 8-30 மணி: வாணியம்பாடி.

மார்ச் 5, 6 : சென்னை நகரத் தொகுதிகள்.

மார்ச் 8 : குளித்தலைத் தொகுதி.

மார்ச் 9 : மதுரை மத்திய தொகுதி.

கோவை நகரத் தொகுதி தி. மு. க. உறுப்பினர்கட்கு:

19—2—57 இரவு 9 மணியளவில் கோவை நகரக் கழகக் கட்டடத்தில், நகரத் தொகுதிக் கிளை செயலாளர் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு நகரக் கிளைச் செயலாளர் தோழர் சி டி தண்டபாணி கேட்டுக்கொள்கிறார்.

* * * * * * * * * * * * * * * *

சென்னை மகளிர் மன்றச் சார்பில்

தி. மு. க. தேர்தல் பொதுக்கூட்டம்

19-2-57 மாலை 6 மணிக்கு, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை சிவஞானம் பூங்கா அருகில், சென்னை—பேசின் பிரிட்ஜ் சட்டசபைத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து, சென்னை மகளிர் மன்றச் சார்பில் வெற்றிச்செல்வி—அன்பழகன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழியர் சத்திய வாணி-முத்து, அருண்மொழி-வில்வம், மாணவி சற்குணம், அமுதா, கமலா-பாலசுந்தரம், புவனேசுவரி-நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * * * * * * * * * * * * * * *

சென்னை முத்தமிழ் முன்னேற்ற மன்ற ஆண்டு விழா

20—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை - இராயப்பேட்டை அம்மன் கோவில் திடலில், சீனுவாசபுரம் முத்தமிழ் முன்னேற்ற மன்ற இரண்டாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், தோழர் லோகநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சுரதா, அ. தாயமணி ஆகியோர் பேசுவர்.

'மாற்றாரின் தூற்றல் பாணங்களால் மருள வேண்டாம்'

கழகத் தோழர்களுக்கு முன்னணி வீரர்கள் தரும் ஆறுதல்

சென்னை, பிப் 16—

சென்னை—பூங்கா நகர் வலகந்தப்பன் தெருவில் (ஒற்றைவாடை தியேட்டர் எதிரில்) 27-வது வட்ட அறிவியக்க மன்றச் சார்பில் தோழர் என் வி. நடராசன் அவர்களை ஆதரித்து நேற்று மாலை தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்று தோழர் ஆ. இராசன் தலைமையில் நடைபெற்றது.

சிறுமிகள் பத்மா, வனஜா, பேபி ஆகியோர் இயக்கப்பாடல்கள் பாடினர். தலைவரின் முன்னுரைக்குப் பின் தோழர் மு. வ. வேலன் சிறிது நேரம் பேசினபின், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள், வடநாடு வேறு தென்னாடு வேறு என்பதை சரித்திரச் சான்றுகளுடன் விளக்கி, திராவிடம் சுரண்டப்படுவதைத் தடுத்து நல்லாட்சி நிறுவவேண்டிய அவசியம் குறித்து சொற்பொழிவாற்றினர்.

அடுத்து கவிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், காங்கிரஸ் சர்க்காரின் 9 ஆண்டு கால மிருக வெறி ஆட்சியை சுட்டிக்காட்டி, மக்கள் இனிமேல் துன்பம் நீங்கிவாழ காங்கிரசுக்கு ஓட்டளிக்காமல் தி மு கழகத்தை வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், தி மு கழகத்தின் கடந்தகால மக்கள் பணிகளை எடுத்துக்காட்டி, தொகுதி அபேட்சகர் தோழர் என். வி நடராசன் அவர்களையும் ஆதரிக்கக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் பி. எம் கருணாகரன் அவர்கள் தெலுங்கு மொழியில் சர்க்காரின் கையாலாகாத்தனத்தை எடுத்துக் கூறினார்.

பின்னர் தோழர் சுரதா பேசுகையில் 'கடைக்குச் சென்று பானை வாங்கும் பெண் நல்ல பானையாக—ஓட்டை விழாத பானையாக வாங்குவதுபோல், தேர்தலில் நிற்கும் கட்சிகளைப் பொதுமக்கள் அந்தந்தக் கட்சிகள் ஆற்றியுள்ள பொதுப் பணிகளைப் பார்த்தே தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த முறையில் பார்த்தால் தி. மு கழகத்தவருக்கு மக்கள் வாக்கு அளிக்கக் கடமைப்பட்டுள்ளனர்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என் வி நடராசன் அவர்கள், தேர்தலின்போது பொது மக்கள் நடந்துகொள்ளவேண்டிய தன்மைகளைப் பற்றியும், கழகத்தவரை மாற்றார் பழித்துப் பேசினாலும் பொறுத்துக்கொண்டு அவைகளுக்காகக் கழகத் தோழர்கள் மருட்சியடையத் தேவையில்லையென்றும் கூறி, கழக அபேட்சகர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினார்.

இறுதியாக ஓட்டல் தொழிலாளர் தலைவர் தோழர் இராமசாமி அவர்கள் தோழர் என். வி நடராசன் அவர்களின் பொதுப் பணிகளை விளக்கியும், கழகத்தின் சேவைகளை எடுத்துரைத்தும், தோழர் என். வி. நடராசன் அவர்களை மக்கள் ஆதரிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

கூட்டத்தின்போது கவிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், 'ஏழையைக் கோழை என்று நினைக்குது—உலகம், அதை எடுத்துச் சொல்லுகை சீறிப் பாய்ந்து மிரட்டுது' என்ற கருத்துப் பொதிந்த பாடலைப் பாடினார். பின்னர் சிறிதுநேரம் தெலுங்கு மொழியில் ஏழைகளின் அவல நிலையையும், அரசாங்கத்தாரின் அலட்சியப் போக்கையும் எடுத்துரைத்தார்.

தி மு கழகத் தேர்தல் நிதிக்காக ரூ 11—6—3 தோழர் எம் ஆர். மணிக்கவல் அவர்களால் தோழர் என். வி. நடராசன் அவர்களிடம் தரப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு $10\frac{1}{2}$ மணியளவில் முடிவுற்றது. (ந. - வி.)

மக்கள் நலனை மறந்த காங்கிரசுக்கு தக்க பாடம் புகட்டுவீர்

சென்னை கூட்டத்தில் கழகத் தோழர்கள் வேண்டுகோள்

சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிடும் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து, கடந்த 13-ந் தேதியன்று மாலை, சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை பத்மநாபா டாக்கீசை அடுத்த சக்கரைச்செட்டித் தெருவில் தி. மு கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் ஊ. பு இராமதாசன் கழகத் தேர்தல் பிரசாரப் பாடல்கள் பாடினர்.

தோழர்கள் அரு சக்கரபாணி, பெ. த. இன்மொழியன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்தும், காங்கிரஸ் சர்க்காரின் கையாலாகாத்தனத்தை விளக்கியும், நாடு மீண்டும் சுபீட்சமடைய தி. மு. கழகத் தோழர்களை பொதுமக்கள் ஆதரிக்குமாறும், அந்தப்பேட்டை அபேட்சகரான என். வி. நடராசன் அவர்களுக்கு உங்கள் வாக்களித்து வெற்றிபெறச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினர்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என் வி நடராசன் அவர்கள், காங்கிரஸ் இயக்கம் இன்று எந்தெந்த வகையில் பிற்போக்குத்தனமான பிரச்சாரங்களிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதின்மூலம் எப்படி கழகத்திற்கு மாசு கற்பிக்க முயலுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, நாட்டு மக்களின் நலனில் அக்கறையில்லாமல் மீண்டும் நாடாள ஆசை கொண்டிருக்கும் காங்கிரசாருக்குத் தக்கபாடம் கற்பிக்கவேண்டுமென்றும் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் க. அன்பழகன் அவர்கள், தேர்தல் நெருங்க நெருங்க மாற்றுக்கட்சியினரின் நடவடிக்கைகள் எவ்வளவு கீழ்த்தரமான முறையில் சென்றுகொண்டிருக்கின்றன என்பதை விளக்கி இவைகளையெல்லாம் பொதுமக்கள் தங்கள் உறுதி குலையாது கழகத்திற்கே ஆதரவுதருமாறு கேட்டுக்கொண்டு உரை நிகழ்த்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நுனிசையராசனை செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.